**விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சு**
**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு**

**வெற்றிடங்கள்**

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது (NASTEC), விஞ்ஞான மற்றும் தொழினுட்ப அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுகிறது.

**கீழ்குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு கோருகிறது**

<u>முகாமைத்துவ உதவியாளர் பதவி (**MA 1-2)** – 02</u>
<u>(ஒப்பந்த அடிப்படை)</u>

**<u>கல்வித்தகைமைகள்:</u>**

**<u>வெளிப்புற விண்ணப்பதாரர்கள்</u>**:
அ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரு அமர்வில் கீழ் குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில், திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii.ஆங்கிலம்
iii. கணிதம்

**<u>ஆ)</u>** க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களில், (பொது உளச்சார்பு பாடம் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**<u>அக விண்ணப்பதாரி:</u>**

தொடக்க நிலை – திறன் உடைய மற்றும் தொடக்க நிலை – திறனற்ற பணியாளர் பிரிவுகளைச் சேர்ந்த, பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள பணியாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

**<u>கல்வித்தகைமைகள்:</u>**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் கீழ் குறிப்பிடப்பட்ட பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில், திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
i. சிங்களம்/தமிழ்
ii.ஆங்கிலம்
iii. கணிதம்

**<u>ஏனைய தகைமைகள்:</u>**

மேற்கண்ட பணியாளர் பிரிவின் கீழ், நிரந்தரப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**: விண்ணப்பதாரர்18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அக விண்ணப்பதாரருக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

சம்பள அளவுத்திட்டம்: **MA 1-2-2025 Rs.[46,220 -10x540 -7x630 -12x1,080 -12x1,280 - 84,350]**
**(அடிப்படை சம்பளம் +அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகள்)**

**பதவிக்குரிய பிரதான கடமைகள் :** https://nastec.gov.lk/ எனும் முகவரிக்குரிய இணையத்தள பக்கத்தை மேலதிக விபரங்களை பெற நோக்குக.

**ஆட்சேர்ப்பு நடைமுறை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் / அல்லது பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய, நியமன அதிகாரத்தை கொண்ட அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடத்தப்படும் படிமுறை இயல்பிலான நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

- **விண்ணப்பிக்கும் நடைமுறை:** உறவினர்கள் அல்லாத இரண்டு நபர்களின் தொடர்பு இலக்கங்கள் உள்ளடக்கப்பட்ட விரிவான சுயவிபரக் குறிப்புடன், சம்மந்தப்பட்ட சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து, **22.09.2026** ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடிய வகையில், பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 06ஆம் தளம், Wing D, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தகுதி பரிசீலனைக்குப் பின் குறும்பட்டியலில் இடம்பெறும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பிக்கும் பதவியானது, உறையின் மேல் பக்க இடது மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் / சபைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள், அவரவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

- இந்த நிரந்தரப் பதவியானது ஊழியர் சேமலாப நிதியம் (நிறுவனத்தின் பங்களிப்பு 12% மற்றும் ஊழியரின் பங்களிப்பு 8%) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (நிறுவனத்தின் பங்களிப்பு 3%) ஆகியவற்றுக்கு உரித்துடையது ஆகும்.

**பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு,**
**06ஆம் தளம், Wing D,**
**கட்டம் II, செத்சிறிபாய,**
**பத்தரமுல்ல**
**தொலைபேசி : +94 11 218 6711 தொலைமடல் : +94 11 218 6713**